அலுவலுக்குப் போகலாம். அவர்கள் தேர்ந்து எடுக்கிற கேள்விகள் குறைந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். அது ½ மணியில் முடிந்து விடுகிறது. முன்பெல்லாம் நிறையக் கேள்விகள் போட்டு இருப்பார்கள், அவற்றை மெயில் வேகத்தில் எடுத்துக்கொண்டு முடித்து விடுவீர்கள். இப்போது மிகக் குறைந்த கேள்விகளே வருகின்றன. அதுவும் தொகுதி பற்றிய கேள்வியாக வருகிறது. "கும்மிடிப்பூண்டியில் குளம் வெட்டினார்களா" என்று வருகிறது. அப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் ஓரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, பாலிஸி சம்பந்தமான கேள்விகளை அனுமதிக்கவேண்டும். நாளைய தினத்திலிருந்து 10 கேள்விகள் அதிகமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்

வறட்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசு உதவியை கோரப் போவதில்லை என முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பதிப்பும் குறித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "Serious situation arising out of Hon'ble Chief Minister's Statement in the House on 17th March 1975 disowning any aid for drought from Centre resutling in suffering the drought affected millions in Tamil Nadu".

என்ற பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஜே. ஜேம்ஸ், கே.டி.கே. தங்கமணி, ஆலடி அருணா ஆகியோர் 41-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையை ஒத்தி வைத்து விவாதிக்கக் கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்க வேண்டும். திரு. ஆலடி அருணா.....

*திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிலிருந்து இப்போது நிதி அமைச்சராக இருக்கிற திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசில் நிதி அமைச்சராக நீடிக்கிற வரையில் தமிழ் நாடு அரசு நிதி கேட்காது என்ற தீவிரமான முடிவை இந்த மன்றத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தத் தீவிரமான முடிவை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளியிட்டதன் காரணமாக தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி மக்கள் மனதிலே ஒரு பெரிய அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

நாட்டில் பஞ்சம், பற்றுக்குறை ஆகியவை பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டு இருக்கிறது. வரலாறு காணாத அளவுக்கு இந்த நிலைமையேற்பட்டிருக்கிறது. எனவே, அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் இந்தப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியும்,

வறட்சியைப் போக்க முடியும் என்றெல்லாம் நாட்டு மக்களிடையே ஒரு பலமான கருத்தைச் சொல்கிற போது வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிடமிருந்து கையேந்தி வாங்க மாட்டேன் என்ற தீவிரமான முடிவை இந்த மாமன்றத்திலே சொல்வதால் தமிழகத்திற்கு எவ்வளவு பெரிய குந்தகம் ஏற்படுகிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசியது பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது, அதுதான் முதலமைச்சரவர்களைப் புண்படுத்தியது, ஆத்திரமூட்டியது, ஆகவே, ஆவேசத்திற்கு ஆளாக்கியது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்திருக்கும். வறட்சிப் பணிக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு 6 இலட்சம் பேர்களுக்குப் பகிர்ந்தளிக்க ரூபாய் $7\frac{1}{2}$ கோடி கேட்டுள்ளனர். முன்பு கொடுக்கப்பட்ட வறட்சிப் பணம் சரியாக மக்களுக்குப் போய் சேரவில்லை; இப்போது போய் சேருமா என்று பிரதமர் சொன்ன போது இங்குள்ளவர்களுக்குக் கோபம் வந்துள்ளது. இப்போது கொடுக்கிற பணம் மக்களுக்குப் போய்ச் சேர்ந்து, அதற்குரிய சரியான கணக்கை வைத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன், இன்னும் அதிகப் பணம் வேண்டுமென்றால் தருகின்ற கணக்கைப் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும் என்ற முறையில் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது.

தியாகராய நகர் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. இப்படி ஒரு மாநில அரசுக்குத் தருகின்ற பணத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு கருத்தை மத்திய அமைச்சர் வெளியிட்டிருக்கிறார். இதற்கு ஒரு தீவிரமான பதிலை, வேகமான பதிலைக் கட்சி அடிப்படையில் அல்ல; அரசியல் அடிப்படையில் முதலமைச்சரவர்கள் மறுநாள் ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய நிதியமைச்சர் தெருவிலே எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் தெருவிலே பதில் அளித்திருக்கிறார்கள். அது ஒரு பெரிய அரசியல் மோதலாக முடிந்துவிட்டது.

மத்திய அமைச்சரின் கேள்விக்கு முதலமைச்சர் விளக்கம் அளித்தார். ஆனால் அது அரசியல் உட்கோட்டின்மீது கொண்ட மோதலாக முடிந்து விட்டது. அதனால் இந்த மன்றத்திலே வந்து, நிதியை வாங்கமாட்டேன், கையேந்தி நிற்கமாட்டேன் என்று சொல்வதன் மூலம் நம்முடைய திட்டப் பணிகள், ஆக்கப்பூர்வமான வேலைகள் பெரிதும் பாதிக்கப்படும். இந்தக் கருத்தினை வலியுறுத்தி ஒரு முடிவு காண்பதற்காகவே இன்றைய தினம் சர்வகட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.